TOPAZ
No.01 Shop in Jaffna
Wedding Frocks
Measure Tailoring
Party Sarees & All Kinds of Items
Party Frocks
Wedding Sarees
Specialist in Wedding Suits
TOPAZ
TOPAZ Mall
TOPAZ CUSTOM TAILORS
தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

10/=

பக்கங்கள் 12

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 235 ஞாயிற்றுக்கிழமை ஜனவரி 14 2018 ethirolimedia@gm... 021 300 48 48

தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

# சுமந்திரன் துரோகி

## மண்ணள்ளித் திட்டி ஆர்ப்பாட்டம்! காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்



வவுனியா, ஜனவரி 14

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஒரு துரோகி எனக் கூறித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்களுக்கு மண்ணள்ளித் திட்டி, கதறி அழுது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது உறவுகளை மீட்டுத் தருமாறும், அவர்களுக்கு என்ன நடந்தது என வெளிப்படுத்துமாறும் கோரி வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

06▶

## வீதியிலேயே பொங்கல் கேப்பாபிலவு மக்கள் முடிவு

முல்லைத்தீவு, ஜன. 14

தைப்பொங்கல் தினமான இன்று வீதியில் பொங்கல் பொங்கிப் போராட்டம் நடத்தப் போவதாக கேப்பாபிலவு மக்கள் அறிவித்துள்ளனர்.

நாம் அரசாங்கத்துக்கு எதிராகவோ, இராணுவத்தினருக்கு எதிராகவோ போராடவில்லை. எங்கள் காணிகளை விடுவிக்குமாறே போராடுகிறோம். ஆனால் இந்த, நல்லாட்சி அரசாங்கம் எம்மை வீதியில் தள்ளியுள்ளது.

06▶

## ஜனாதிபதி சொல்வது பச்சைப் பொய்

### ஆதாரத்துடன் சார்ள்ஸ் எம்.பி. சொல்கிறார்



யாழ்ப்பாணம், ஜன. 14

வடக்கில் படையினர் வசமிருந்த 80 வீதமான பொது மக்களின் காணிகள் அவர்களிடம் மீளளிக்கப்பட்டன என ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கை தொடர்பில் ஆச்சரியமும் ஏமாற்றமும் அடைந்துள்ளார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிய கடிதத்திலேயே, அவர் இதனைக் கூறியுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும்,

வடக்கில் விடுவிக்கப்பட்டதாக கூறப்படும் படையினர் கைப்பற்றியுள்ள

06▶

Global Rent A Car
வாடகைக்கு கார், வான் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Office: 021 221 7424,
Mobile: 077 071 2317
E.mail: globalrent25@gmail.com

## கல்வியில் வடக்கு மீண்டும் முதலிடம்



யாழ்ப்பாணம், ஜன. 13

"கல்வி அடைவு மட்டத்தில் 9 ஆவது இடத்தில் இருந்த வடக்கு மாகாணம் தற்போது முதலாவது இடத்தைப் பிடித்திருக்கிறது. வட மாகாண மாணவர்கள் வெவ்வேறு துறை ரீதியாக முதல் 10 இடங்களைப் பிடித்திருக்கின்றார்கள். கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது, வட மாகாணத்தின் கல்வித் துறையில் முன்னேற்றம் உள்ளது"

- இவ்வாறு வட மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாணக் கல்வி அமைச்சில் நேற்று நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"வட மாகாண கல்வியின் அடைவு மட்டம் தொடர்பாக தற்போது சில முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில், எமது மாணவர்கள் பல்வேறு துறைகளிலும், சர்வதேச ரீதியில் பல பதக்கங்களைப் பெற்று மாகாணத்தின் கல்வி மட்டத்தை முன்னேற்றியுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொது தராதர

06▶

உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்
உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்
பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்
- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.
SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.
SLT RAINBOW PAGES
Print & Digital Directories
உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# பட்டப்போட்டி வல்வையில் இன்று

வடமராட்சி, ஜன.14

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு,வல்வை உதய சூரியன் கடற்கரையில் வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையம் நடத்தும் மாபெரும் விநோத பட்டப் போட்டி திருவிழாவும், சுப்பர் சிங்கர் நட்சத்திரங்கள் கலந்து சிறப்பிக்கும் இசை நிகழ்ச்சியும் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

பட்டத்திருவிழா பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து இசை நிகழ்ச்சி இரவு 12 மணிவரை இடம்பெறவுள்ளது. இந்தப் பட்டப்போட்டியில் புத்தாக்கத் தன்மை மிக்க, பார்ப்போரைக் கவரும் விதவிதமான பட்டங்கள் விண்ணில் பறந்து பார்ப்போரை மகிழ்விக்கவுள்ளன.

இந்தப் பட்டப்போட்டியில் பிரதம விருந்தினராக கடற்றொழில், நீரியல்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர கலந்து கொள்ளவுள்ளார். (அ)

# கிளிநொச்சியில் 11 மீறல்கள்

கிளிநொச்சி, ஜன.14

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் ஜனவரி 12 ஆம் திகதிவரை பதினொரு சம்பவங்களுக்கான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் இந்தத் தகவலை வெளியிட்டார்.

"கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கும் ஒன்பது அரசியல் கட்சிகளும், ஒரு சுயேச்சைக் குழுவும் போட்டியிடுகின்றன.

எனவே வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் 12 ஆம் திகதி வரையான காலத்தில் பதினொரு தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்களே பதிவாகியுள்ளன. அதில் பிரமந்தனாறு பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்துக்குள் உள்நுழைந்து தாக்குவதற்கு முயற்சி செய்த சம்பவமே பெரிய தேர்தல் விதிமுறை மீறல் சம்பவமாகக் காணப்படுகிறது" எனவும் மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டின் ஏனைய பகுதிகளை விட வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் மிகக் குறைந்தளவே தேர்தல் வன்முறைகளும், விதிமுறை மீறல்களும் பதிவாகியுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸாரோடு பொங்கல் வேட்பாளர்களின் மீறல்

வவுனியா, ஜன.14


வவுனியாப் பிரதி பொலிஸ் மா அதிபர்வளாகத்தில்பொலிஸருடன்இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நேற்று முன்தினம் மாலை பொங்கல் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதுவொரு அப்பட்டமான தேர்தல் விதிமீறல் எனவும், இத்தகைய விதிமீறல்களுக்கு பொலிஸாரே உடந்தையாக இருந்துள்ளனர் எனவும் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வேட்பாளர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனியாப் பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் பொங்கல் நிகழ்வு இடம் பெற்றது. இதில் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் வவுனியா நகரசபையில் போட்டியிடும் வேட்பாளர்கள் மூவரும் கலந்து கொண்டு பொங்கல் நிகழ்வில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பண்டாரிக்குளம் பகுதியில் போட்டியிடும் வேட்பாளரும், வவுனியா நகரில் போட்டியிடும் வேட்பாளரும், தமிழர் விடுதலைக் கூட்டனி சார்பில் பண்டாரிக்குளத்தில் போட்டியிடும் வேட்பாளருமே இதில் கலந்து கொண்டு பொலிஸாரோடு பொங்கல் கொண்டாடியவர்கள்.







இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பண்டாரிக்குளம் தொகுதிக்கான தேர்தல் அலுவலகம் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்ட போது பொலிஸ் அதிகாரி ஒருவர் சீருடையுடன் மங்கல விளக்கேற்றி அதனை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இந்நிலையில், தேர்தல் சட்ட விதிமுறைகளை பொலிஸாரே மீறுவது குறித்தும், அதுதொடர்பில் தேர்தல் திணைக்களம் மௌனமாக இருப்பதும் ஏன்? என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (அ)

# வெளிச்சத்தின் பொங்கல் அன்பளிப்பு

வவுனியா, ஜன.14

வவுனியா வெளிச்சம் அறக்கட்டளை, மடு பிரதேச செயலகத்துடன் இணைந்து 2018ஆம் ஆண்டு தைப் பொங்கல் தினத்தை கொண்டாடும் முகமாக மடு பிரதேசத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய பிரதேசங்களான முள்ளிக்குளம், பூசாரியார் குளம் போன்ற பிரதேசங்களிலும் ,வவுனியா பிரதேசத்தில் உள்ள ஈச்சங்குளம், நெளுக்குளம் மிகவும் வறிய நிலையிலுள்ள, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 15 குடும்பங்களுக்கு பொங்கல் செய்வதற்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் அவர்களுடைய வீடுகளுக்கு நேரில் சென்று வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் திரு.பா. லம்போதரன், செயலாளர் திரு. தி. கார்த்திக், உறுப்பினர் திரு.வ.பிரதீபன், ஊடகவியலாளர் பா.கதீசன், சமுர்த்தி உத்தியோகத்தர் திரு. றஜீவ், சமுர்த்தி சங்கத் தலைவர் உ.வீரப்பன், பூசாரியார்குளம் ஆசிரியர் செல்வி. சுலோசனா மற்றும் முள்ளிக்குளம் முன்பள்ளி ஆசிரியர் திருமதி. செல்வமலர் போன்றோர் கலந்து கொண்டனர். (அ)





# வாக்காளர் அட்டைகள் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு,ஜன.14

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்காளர் அட்டைகள் அனைத்தும் நேற்று முதல் விநியோகிக்கப்படத் தொடங்கியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



அனுராதபுரம், குருநாகல், மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கான, வாக்காளர் அட்டைகளும், மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கான தபால்மூல வாக்காளர் அட்டைகளும் விநியோகிக்கப்படுவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார். (அ)

# மீனவர்களே அவதானம்!

கொழும்பு, ஜன.14

காங்கேசன்துறையில் இருந்து - திருகோணமலை ஊடாக - மட்டக்களப்பு வரையான ஆழ்கடல் மற்றும் ஆழமற்ற கடற்பிரதேசங்களில் காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

சில பிரதேசங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 80 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கும்.

இதனால் கடற்பிரதேசம் கொந்தளிப்புடன் காணப்படும். கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடுவோர் அவதானத்துடன் செயற்படுமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)


# பொல்காவெல மேம்பாலம் 17 ஆம் திகதி திறக்கப்படும்

கொழும்பு,ஜன.14

பொல்காவெல மேம்பாலம் இம் மாதம்17 ஆம் திகதி பொதுமக்களின் பாவனைக்காகத் திறக்கப்பட உள்ளது.

ரயில் போக்குவரத்துக் காரணமாக நாளாந்தம் 4 மணித்தியாலங்களுக்கும் அதிகமாக பொல்காவெல வீதி மூடப்படுவதனால், வாகன நெரிசல் ஏற்பட்டு வந்தது. இதனைத் தவிர்க்கும் வகையில் இந்த மேம்பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மேம்பாலத்தின் நீளம் 353 மீற்றர்களாகும். இதன் நிர்மாணப் பணிக்கு 200 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை செலவிடப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)





# பொங்கலோ பொங்கல்

எல்லாருக்கும் விநாசியின்ரை பொங்கல் நல் வாழ்த்துக்கள். எப்பிடி இருக்கிறியள்? இப்ப சில பேர் பொங்கல் பொங்கி இருப்பியள். சாப்பிட்டும் இருப்பியள். நேரத்துக்கு வேலை முடியேல்லை எண்டு சில பேர் மனிசிமாரோடையும் பொங்கி இருப்பியள். இண்டைக்கு நல்ல நாள்ப் பெருநாள். கெட்டதை எல்லாம் அடக்கிக் கொண்டு நல்ல விசியங்களை வெளிக் கொண்டு வரப்பாருங்கோ. அது உங்களுக்கும் நல்லது. எல்லாருக்கும் நல்லது.

மற்றது முந்தி எல்லாம், நான் சிறுசா இருந்த காலத்திலை, வயலிலை கதிர் அறுத்துச் சூடடிச்சுத்தான் சூரியனுக்குப் பொங்கிப் படைச்சனாங்கள். அப்ப மாரி மழையும் அதுக்கேற்ற மாதிரி ஒத்துழைச்சிது. நேரத்துக்கு எல்லாம் நடந்ததுதான். இப்ப காலங்கெட்டுப் போச்சுதெண்டுதானே எல்லாரும் கதைக்கினம். இப்பவெல்லாம் போன வருசத்து அரிசியிலைதானே இந்த வருசப் பொங்கல் நடக்கிது. இந்த வருச அரிசியை வைச்சு அடுத்த வருசந்தான் பொங்குவம். இது எப்பிடி இருக்கு?

உதைச் சொல்ல என்ரை மருமோன் பெடி சொல்லுறான், உங்கை யாழ்ப்பாண ரவுணுக்கை வாற வெளிநாட்டுப் பழ வகைகயள் எல்லாம் ஒரு வருசத்துக்கு முன்னம் பிடிங்கியாம், ஐஸ்ஸிலை வைச்சிட்டுக் கொஞ்சங் கொஞ்சமாத்தானாம் இஞ்சை அனுப்பிவினம். நாங்கள் யாழ்ப்பாணத்திலை மரத்திலை பிடுங்கி அப்ப அப்ப உயிரோடை சாப்பிட்ட சாப்பாட்டை ஒரு வருசங் கழிச்சுத் திண்டால் எப்பிடி இருக்கும்? இப்ப சனத்துக்கு நன்மை விளங்கிறது கிடையாது. நல்லது தின்னிற பழக்கம் எங்களிட்டை இல்லாமல் போகப் போகுது எண்டது தான் என்ரை கவலை எல்லாம்.

உதைச் சொல்லேக்கைதான் முதலி சொன்னது ஞாபகத்துக்கு வருகிது. போன ஆவணியிலை உவன் வெங்காயத்தைக் கிளறிக் கொழும்புக்கு அனுப்பிப் போட்டு பட்டியல் வாங்கப் போனவன். வெங்காயம் போனது லொறியிலை. அவர் போனது ஏசி பஸ்ஸிலை. இடையிலை ஓரிடத்திலை சாப்பாட்டுக் கெண்டு நிப்பாட்டினாங்களாம். சனம் வத, வத எண்டு இறங்கி கடைக்கை உள்ளிட்டால், அந்தச் சாமாத்திலையும் விழுவாங்கள் சோத்தைத்தான் தின்னுறாங்களாம். அதுகும் சும்மா இல்லை. அரை அவியல் சோறு. அதைப் பெரிய தாச்சிக்கை போட்டு அதுக்கு எத்தினையோ சாமாங்களைப் போட்டு கரிச்சுப் பொரிச்சுக் கொண்டு வந்து வைச்சால் கண்ணை மூடிக்கொண்டு வெளுக்கினமாம். ஆனால் அவன் சோத்தைப் பொரிக்கேக்கை போட்டதெல்லாம் சரீரத்துக்கு உதவாத சாமாங்களாம். உந்தக் கொத்து ரொட்டியும் உதே பற்றன்தானாம். சனம் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் சீவிக்கிதுகள் எண்டது தான் என்ரை கவலை. காசைக் குடுத்துக் கரைச்சலை வேண்டுதுகள்.

முந்தின காலத்திலை இப்பிடி ஏதேனும் நல்ல நாள்ப் பெருநாள் வந்தால், வாய்க்கு ருசியாப் பலகாரங்கள் செய்து அயலட்டைக்குக் குடுத்து வாங்கிக் கொட்டிச் சிந்தித்தான் கொண்டாட்டம் நடக்கும். இப்ப பலகாரங்கள் எல்லாத்தையும் பேக்கரியள் செய்து விக்கினம். அதை வாங்கி ஒரு தட்டிலை வைச்சு ஒரு கரண்டியையும் தருவினம். அளவாத் தின்னுங்கோ எண்டு சொல்லிறமாதிரி. ருசியானதா இருந்தாலும் கன்க்க எடுக்கப்பயம். என்ன நினைப்பினமோ தெரியாது எண்டுதான். அதோடை இப்ப வீடுகளிலை பலகாரம் செய்ய ஆக்களும் இல்லை. இருக்கிறதுகள் அரைவாசிக்கும் நோயும் துன்பமும். குளிசைபோடாமல் ஆர் இருக்கினம்? நானும் வாய்க்கு ருசியாத் திண்டு கன நாள். இண்டைக்கு வந்ததெல்லாம் பொங்கல், வடை, மிக்சர் பைக்கற், விசுக்கோத்துப் பெட்டியள். ஆர் உதைத் தின்னுறது? பாலுறட்டி, அரியதரம், சிப்பி, முறுக்குத் தட்டு எல்லாத்தையும் கனவிலையும் காணக்கிடைக்குதில்லை. என்ன செய்வம். இனிமேல் உதுகளைக் கண்காட்சியிலை தான் காண வேணும் போலை கிடக்கு. பொங்கலைக் கனக்கத் திண்டிட்டன். இட்டு முட்டாக் கிடக்கு. வாறன்.

"அதிபர் முழந்தாளிடவில்லை"

# ஊவா முதலமைச்சர் விளக்கம்



கொழும்பு, ஜன.14

பதுளையில் உள்ள தமிழ்ப் பெண்கள் பாடசாலை அதிபரை முழந்தாளிட வைத்து மன்னிப்புக் கேட்க வைத்ததாக, தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை, ஊவா மாகாண முதலமைச்சர் சாமர தசநாயக்க நிராகரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம்கூறுகையில், "இந்துமதத்தைச் சேர்ந்த குறித்த பாடசாலை அதிபர் ஏனைய மதங்களைச் சேர்ந்த மாணவர்களைப் பாகுபாடாக நடத்துவதாக முறைப்பாடுகள் வந்தன.

எனவே அவரை எனது அதிகார பூர்வ வதிவிடத்துக்கு அழைத்து, மாகாணக் கல்வி அமைச்சின் செயலர், கல்விப் பணிப்பாளர், மற்றும் முறைப்பாடு செய்த பெற்றோர் முன்னிலையில் விசாரித்தேன்.

சமூக நல்லிணக்கத்தைக் குழப்பக் கூடும் என்பதால், அதிபர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று மாத்திரம் கேட்டுக் கொண்டேன். நட்புரீதியான கலந்துரையாடலுக்குப் பின்னர், பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொண்டோம்.

எனினும், ஜே.வி.பி மாகாண சபை உறுப்பினர் சமந்த வைத்தியரத்ன, எனது பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில், அரசியல் உள்நோக்கத்துடன் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறார். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன்." என்று தெரிவித்துள்ளார்.


அதேவேளை, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரான ஆர்.பவானியும், ஊவா முதலமைச்சர் மீதான குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

இரண்டு பெற்றோர் செய்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைக்காக, தாம் முதலமைச்சரரை அவரது அதிகாரபூர்வ வதிவிடத்தில் சந்தித்தாகவும், நட்பு ரீதியாக அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொய்யான பரப்புரைகள் மூலம் அரசியல்வாதிகள் மலிவான அரசியல் இலாபம் தேட முனைவதாகவும் பாடசலை அதிபர் பவானி தெரிவித்துள்ளார். (அ)

# சீனாவோடு இலங்கை: அனுமதிக்க முடியாது

## இந்திய இராணுவத் தளபதி காட்டம்



புதுடெல்லி, ஜன.14

இலங்கை போன்ற நாடுகள் சீனாவை நோக்கிச் செல்வதை அனுமதிக்கக் கூடாது என்று இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவ தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"சீனா வலிமையான நாடாக இருக்கலாம். ஆனால் இந்தியா பலவீனமான நாடு அல்ல.

பாகிஸ்தான் எல்லையின் மீதுள்ள கவனத்தை சீனாவின் பக்கமும் இந்தியா திருப்ப வேண்டிய தேவை உள்ளது.

எமது அயல்நாடுகள் சீனாவை நோக்கி நகர்வதை நாம் அனுமதிக்கக் கூடாது. அயலவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் கொள்கையை இந்திய அரசாங்கம் காத்திரமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

சீனாவைக் கையாளுவதற்கான பரந்துபட்ட மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, நேபாளம், பூட்டான், மியான்மார், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளை, இந்தியா தன் பக்கம் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். இந்த நாடுகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதற்கு இந்தியா முழுமையான முயற்சிகளை எடுக்க வேண்டும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(அ)

நாடளாவிய டெங்கு ஒழிப்பு

# வேலைத்திட்டம் விஸ்தரிப்பு

கொழும்பு,ஜன.14

இந்த வருடம் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படும் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலும் மட்டக் களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பாடசாலை மட்டத்திலும் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. மக்களின் ஒத்துழைப்பு இருப்பின் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினை சிரமமின்றி மேற்கொள்ள முடியும் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் நிபுணர் டொக்டர் பிரஷிலா சமரவீர குறிப்பிட்டுள்ளார்

2018 ஆம் ஆண்டில் இதுவரை ஆயிரத்து 350 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தாலும் டெங்கு நோயால் இந்த வருடத்தில் இதுவரை எந்தவொரு உயிரிழப்பும் நேரவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (அ)



# பல்கலை அனுமதிக்கு படிவம் பூர்த்தி செய்யச் செயலமர்வு

கிளிநொச்சி, ஜன.14

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 2017 இல் க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றி அண்மையில் வெளியான பெறுபேறுகளின் படி, பல்கலைக் கழக அனுமதிக்குத் தகமைபெற்ற வணிகத்துறை மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் நிரப்புதல் தொடர்பான செயலமர்வொன்று கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 15-01-2018 திங்கட்கிழமை பி.ப 1.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் வணிகத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கக் கூடிய 31 கற்கை நெறிகள், அவற்றுக்கான அடிப்படைத் தகமைகள் , அந்தக்கற்கை நெறிகளின் விருப்பொழுங்கினைத் தெரிவு செய்தல் , மேலதிக உளச்சார்புப் பரீட்சையினூடாக விண்ணப்பிக்கக்கூடிய பொதுவான கற்கைநெறிகள், இக்கற்கை நெறிகள் தொடர்பான அண்மைக்காலப் போக்குகள் என்பன தொடர்பாக துறைசார் வளவாளர்களால் விளக்கமளிக்கப்படவுள்ளது.

எனவே இந்தச் செயலமர்வில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற வணிகத்துறை மாணவர்களையும், பொறுப்பாசிரியர் ஒருவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ)

## இன்று நாளும். கோளும்

14.01.2018 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 29 ஆம் நாள்

திரயோதசி மு.பகல் 04.20 மணி வரை | கேட்டை 03.28 வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 04.30 - 06.00 | சுபநேரம் மு.ப. 06.30 - 07.30 | எமகண்டம் பி.ப. 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கவனம் | கீர்த்தி | நிம்மதி | கவலை | பரிவு | பரிசு | வரவு | தெளிவு | பாராட்டு | வேதனை | சோர்வு | நன்மை |



# மகிந்தவைக் களமிறக்குவோம்

## கம்மன்பில சவால்

கொழும்பு, ஜன.14

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை பதவியில் இருக்கலாம் என உயர்நீதி மன்றம் தீர்மானித்தால்,கூட்டு எதிர்க் கட்சி தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை களமிறக்கும் என நாடாளு மன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சிங்கள வாரப் பத்திரிகை ஒன்றிடம் அவர் இதனைக் கூறியுள்ளார்.

"இது குறித்து தற்போது சட்ட வல்லுநர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய 6 ஆண்டு காலம் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பதவி வகிக்கலாம் என உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இதனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போட்டியிட முடியும் " என அவர் கூறியுள்ளார். (அ)

# நமக்காக ஒரு எம்.பி. நாடாளுமன்றில் தேவை


## வேடுவ தலைவரின் ஆசை

மஹியங்கனை , ஜன.14

மஹியங்கனை - தம்பனை பிரதேசத்தை சேர்ந்த வேடுவ மக்களின் சார்பில் தமது பரம்பரையைச் சேர்ந்த ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பத் தான் தீர்மானித்துள்ளதாக வேடுவர்களின் தலைவரான ஊறுவரிகே வன்னியலெத்தோ தெரிவித்துள்ளார்.

"தற்போதைய அரசியல் முறையில் வேடுவ மக்களின் உரிமைகள், அவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து குரல் எழுப்பும் நோக்கில் மாகாணசபைகள், நகரசபை மாத்திரமல்லாது நாடாளுமன்றத்துக்கும் செல்ல வேடுவ மக்களில் படித்த இளைஞர் ஒருவர் அரசியலுக்கு வருவதை நான் எதிர்க்கப் போவதில்லை .

வேடுவ மக்கள் சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபடவோ, வேறு நாளாந்த தேவைகளுக்காகவோ காடுகளுக்குள் செல்ல முடியாதபடி வனப் பாதுகாப்புச் சட்டம் செயற்படுத்தப் படுகிறது. இப்படியான பிரச்சினைகள் சம்பந்தமாக அரசின் பொறுப்பு வாய்ந்தவர்களிடம் மக்களுக்கு தேவையான விடயங்களை முன் வைக்க முறையொன்று அவசியம். வேடுவ மக்களின் சார்பில் ஹேனானிகல வேடுவப் பரம்பரையை சேர்ந்த இளைஞர் ஒருவர் இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றார். அவர் வெற்றி பெற்றால் அது வேடுவ மக்களின் வெற்றியாக இருக்கும்" எனவும் வன்னியலெத்தோ குறிப்பிட்டுள்ளார்.(அ)



# ஓடிக் கொண்டிருந்த வாகனத்தில் 'தீ'



கொழும்பு , ஜன.14

கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் வாகனம் ஒன்று திடீரெனத் தீப்பற்றியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் வாகனம் ஒன்றே இவ்வாறு திடீரெனத் தீப்பற்றியுள்ளது. அந்த மோட்டார் வாகனத்தில் பயணித்தவர்களை உடனடியாக அங்கிருந்து

வெளியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதால் எவ்வித பாதிப்புமின்றி அவர்கள் தப்பினர். இருப்பினும் தீப்பற்றியமையினால் மோட்டார் வாகனத்துக்குக் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளன. (அ)

# பதவி விலகத் தயார்!

## -மைத்திரி அதிரடி



கொழும்பு, ஜன.14

" எனக்கு எப்போதும் பதவி ஆசை இருந்ததில்லை. முன்னைய கொடுங்கோல் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துக்காகவும், மக்களுக்காகவுமே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன். மக்கள் விரும்பினால்,

நான் ஜனாதிபதி பதவியை விட்டு இன்று கூட விலகிச் செல்லத் தயார்" என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனது பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது என்று விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உச்சநீதிமன்றத்திடம் விளக்கம் கோரிய விவகாரம் அரசியல் அரங்கில் பெரும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், அக்குரஸ்ஸவில் நேற்றுமுன்முன் தினம் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

"எனது பதவிக்காலம் தொடர்பாக உச்சநீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பு எதுவானாலும் ஏற்றுக் கொள்வேன். ஜனாதிபதி பதவியை இன்றும் கூட கைவிட்டுச் செல்வதற்குத் தயார்.

ஜனாதிபதியாக என்னால் எவ்வளவு காலம் பணியாற்ற முடியும் என்பது தொடர்பாக இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுவதால் தான் உச்ச நீதிமன்றத்தைத் தெளிவுபடுத்துமாறு கோரினேன்.

எப்போதும் ஜனாதிபதி பதவியில் இருப்பதற்காக நான் ஆட்சிக்கு வரவில்லை. எனினும், நாட்டை முன்னேற்றும் கனவை நிறைவேற்றுவதற்காக பதவியில் இருப்பேன்" என்று தெரிவித்துள்ளார்.

(அ)

எதிரொலி Ethiroli
ஞாயிறு. 14 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

# இதுவுமொரு பொங்கல்

தமிழர்கள் எல்லோரும் இன்று "பொங்கலோ பொங்கல்" என்று பொங்குவதற்கு முன்னரேயே, முறையான பொங்கலொன்று வவுனியாவில் நேற்று நடந்தேறியிருக்கிறது. இந்தப் பொங்கலில் பால் பொங்கவில்லை. துக்கத்தைச் சுமந்தலையும் மனங்கள் பொங்கி வழிந்திருந்தன. 354 நாட்களாக வீடு,வாசலை மறந்தவர்களாக தங்கள் பிள்ளைகளையும், துணைவர்களையும், சகோதரர்களையும் பற்றிய ஏதேனுமொரு நம்பிக்கைச் சமிக்ஞை தென்படாதா என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்கள் அவர்கள். தங்கள் நம்பிக்கைகள் ஒவ்வொன்றாகத் தகர்ந்து கொண்டிருப்பதை கண்முன்னே காணும் போது, அவர்கள் மனங்கள் பொங்கத்தானே செய்யும்.

இதுநாள் வரை அரசுக்கும், படையினருக்கும் எதிராகவே காணாமலாக்கப்பட்டோரின் போராட்டங்கள் இருந்தன. ஆனால் முதன்முறையாக –பகிரங்கமாக– தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லப்படும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் புகைப்படங்களை வைத்து, மண்ணள்ளித் திட்டி, சாபமிட்டு தங்கள் மனக்கிடக்கைகளைக் கொட்டித் தீர்த்திருக்கிறார்கள்.

சுமார் ஒரு வருடத்தைத் தொடவுள்ள தங்கள் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டிய அரசியல் தலைவர்கள் அது பற்றிய எந்த அக்கறையும் எடுக்காமல், தங்கள் சுகபோகங்களையும், பதவிக் கதிரைகளையும் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டும், காணாதது போல எப்படி அவர்களை நம்ப முடியும்? எங்கள் அரசியல் தலைவர்கள் போராட்டம் என்று அறிந்தால், எப்போது தங்களுக்கு வசதிப்படுகிறதோ, அப்போதுதான் அந்தப் போராட்டத்தைப் பற்றி அறிந்துகொண்டது போல பதைத்து, துடித்து ஓடி வருவார்கள். வந்தவர்கள் ஏதோ தேவதூதர்களாகத் தங்களைக் கருதி கதிரைகளில் ஒய்யாரமாக அமர்ந்தபடி, கீழிருக்கும் மக்களின் துயரைக் கேட்பது போல பாசாங்கு பண்ணுவார்கள். எல்லாம் முடிய, 'அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கிறோம்' என்று கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன வார்த்தையை இன்னொரு முறை புளிக்கச் சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். போனவர்கள் போனதுதான். அதற்குப் பிறகு எதுவுமே நடக்காது. அப்படி வந்து பார்த்துவிட்டுப் போன அரசியல்வாதிகள் . சொன்னதுபோல அழுத்தம் கொடுக்காவிட்டாலும், அதைப் பற்றி பவ்வியமாகவேனும் அதிகாரத்தில் இருப்பவர்களின் காதில் போட்டிருந்தாலும் பரவாயில்லை. அப்படி ஒரு போராட்டம் நடப்பதைக் கூட தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றிலோ, பொதுவெளிகளிலோ பிரஸ்தாபிப்பதில்லை. 'ஏக்கிய ராஜ்ஜியவா' , 'சுயாட்சியா' என்று கூட்டத்துக்கு கூட்டம் , கையில் பேப்பரோடு ஏறி நின்று கத்துவதும், இலங்கைப் பிரதமரின் கையோடு கை சேர்த்து சிங்கக்கொடியை ஒன்றாகப் பிடித்தபடி 'போஸ்' கொடுப்பதுவுமே அவர்களுக்கு முக்கியம். காணாமலாக்கப்பட்டோர், கைதாகிச் சிறையில் இருப்போர் விடயங்கள் எல்லாம் அரசியல்வாதிகளுக்கு கவைக்குதவாத விடயங்கள்.

இப்படிப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள், பாலித தேவரப்பெரும என்ற சிங்கள் அரசியல்வாதியின் கால்தூசுக்கும் சமதையில்லாதவர்கள். அண்மையில் அனர்த்தங்களால் தென்னிலங்கை சின்னாபின்னமான போது, தனியொருவனாக அங்கு தானே சென்று, மக்களோடு மக்களாக சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு வெள்ளத்துக்குள் இறங்கி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர் பாலித தேவரபெரும என்ற பிரதியமைச்சர். இதே பாலிதப் பெரும, இரு வருடங்களுக்கு முன்னர் தனது தொகுதியில் அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி, 9 பாடசாலை மாணவர்களை இணைக்க மறுத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதம் இருந்தார். இத்தனைக்கும் அப்போதும் அவர் அதே அரசில் பிரதியமைச்சர். அப்படி உண்ணாவிரமிருந்தும் தன் போராட்டதை அரசு கண்டுகொள்ளாததோடு அப்பாவி மாணவர்களின் எதிர்காலம் நாசமாக்கப் படுவதை காணச் சகியாமல், தூக்கில் தொங்கி உயிரை மாய்க்கவும் முயன்றார். பின்னர் பொலிஸாரால் காப்பாற்றப்பட்டிருந்தார்.

அதேபோன்று, 2014 ஆம் ஆண்டு அளுத்கம பகுதியில் பொதுபலசேனாவால் முஸ்லிம் மக்கள் மீது வன்முறை ஏவப்பட்டதைக் கண்டித்து, தன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகும் கடிதத்தையும் சமர்ப்பித்தவர். பாலித தேவரப்பெரும போல, தூக்கில் தொங்கிப் போராடாவிட்டாலும், "காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் ஒட்டுமொத்தக் கூட்டமைப்பின் எம்.பிக்களும் பதவியை ராஜினாமா செய்துவிடுமோ" என்று சும்மா ஒப்புக்குதானும் மிரட்ட தமிழ் அரசியல் தலைவர்களுக்கு மனமில்லை.

அரசு சொல்லும் எல்லாவற்றுக்கும் ஆமாம் சாமி போட்டபடி, மக்களின் பிரச்சினைகளை மூடி மறைக்கும் தமிழ் அரசியல்வாதிகளை காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தமது புகைப்படத்துக்குத்தான் மண்ணள்ளித் திட்டினார்கள் என்றும், தாம் அவர்களிடம் நேரில் சிக்கவில்லை என்றும் அரசியல்வாதிகள் அகமகிழ்ந்து கொள்ளலாம். கண்ணகியின் கோபம் மதுரையை மட்டுமே நெருப்பாக்கியது. காணாமலாக்கப்பட்டோரின் கோபம் பதவிக் கதிரைகளைப் பற்றியெரிய வைக்கப்போகின்றது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# சுயாட்சியோடு வாழ வழி பிறக்கும்



இந்துமா கடலின் முத்தெனவிளங்கும் இலங்கைத் திருநாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கும் புலம்பெயர்ந்து உலகெங்கும் பரந்துவாழும் எம் உறவுகளுக்கும் தைப் பொங்கல் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்வெய்துகின்றேன்.

இன்று, தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் தமிழர் திருநாள், உழவர் பெருநாள் எனப் பெருமைப்படும் தைத்திருநாள் உவகையுடன் கொண்டாடப்படுகின்றது.

இப்பூவுலகில் பருவகாலங்கள் மாறிமாறிவருகின்றன. அத்தகைய மாற்றங்களுக்கு சூரியபகவானே காரணியாகின்றார். அந்தவகையில் மாறிவரும் மாரிகாலத்தில் கிடைக்கின்ற மழை வீழ்ச்சியின் போது விதைக்கப்படுகின்ற பயிர் வகைகள் வளர்ந்து,முற்றி தைமாத ஆரம்பத்தில் அறுவடைக்குத் தயாராகின்றன. எனவே,எமது பாவனைக்கான உணவுப்பொருட்களை உற்பத்தி செய்ய உதவிடும் சூரியபகவானுக்கு நன்றி பாராட்டும் திருநாளாகவே தைப் பொங்கல் பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

முற்றத்தில் கோலமிட்டு,பூரணகும்பம் வைத்து, புதிதாகத் தயார் செய்தஅடுப்பில் புதுப்பானை வைத்து, புதிதாக அறுவடை செய்த நெல்மணிகளில் பிரித்தெடுத்த அரிசியைக்கொண்டு பாற்பொங்கல் பொங்கி சூரியபகவானுக்குப் படைத்திடும் திருநாளாக இப்பொங்கல் பெருநாள் அமைகின்றது.

தைமாதம் பிறக்கின்றது என்றாலே மக்கள் மனங்களில் பெரும் எதிர்பார்ப்புக்களும் துளிர்விடத் தொடங்கி விடுவதுண்டு. எமது மக்களது மனங்களில் நீண்டகால எதிர்பார்ப்பாக இருப்பது,தேசியப் பிரச்சினைக்கான தீர்வேயாகும். அந்தவகையில், நீண்டகாலமாகப் புரையோடிய புண்ணாகக் கருதப்படுகின்ற எமது தேசியப் பிரச்சினைக்கு,புதிய அரசியலமைப்பினூடாகத் தீர்வைக் காண்பதற்கான முன்முயற்சிகள் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு எமதுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய பல அம்சங்களை உள்ளடக்கியதான அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில்,தாமதமின்றி அதற்கான தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு மேலும் சிறந்த சிபார்சுகளையும் உள்ளடக்கி, அனைத்து மக்களதும் இறையாண்மையை மதிக்கக்கூடியதாகவும்,அவர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கூடியதாகவும், நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான சுயாட்சியுடன் கூடிய ஒரு நிரந்தரத் தீர்வைக்காண்பதன்மூலம்இதயசுத்தியுடனானபுரிந்துணர்வையும் இன நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு வழியேற்படவேண்டுமென இந் நன்நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.எனவே,சாந்தி,சமாதானத்துடன் கூடிய சௌபாக்கியமிக்க நாடாக இந்நாடு சிறந்தோங்க, பிறக்கும் தைத்திங்கள் வழிகோலிட எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுவதுடன், எனதுநல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- இரா.சம்பந்தன்,பா.உ.,
எதிர்க்கட்சித் தலைவர்

## தேசியத் தலைவரின் வழியில் விடிவுக்காக உழைப்போம்



ஆண்டாண்டு காலமாக இருந்து வரும், தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை வாசகத்தின் வழியே 2018 தை பிறப்புடன் தமிழர் வாழ்வும் விடிய வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தை உலகத் தமிழர் உள்ளமெங்கும் விதைத்து தமிழ்ப் புத்தாண்டை வருக வருக என வரவேற்பதோடு அனைவருக்கும் தைப்பொங்கல் நல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதில் பேருவகை கொள்கிறேன்.

விடைபெற்றுச் செல்லும் ஆண்டோடு தமிழர்களாகிய நாம் அனுபவித்து வரும் துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், இழப்புகள், ஏமாற்றங்கள் என யாவும் எம்மை விட்டகன்று புலர்கின்ற புதிய ஆண்டில், சுதந்திரமான, சுபீட்சமான நல்வாழ்வு மலரட்டும் என்ற எதிர்பார்புடனும் நற்சிந்தனையுடனும்அடியெடுத்து வைப்போம்

"விடுதலை என்ற இலட்சியத்தை நாம் இலகுவாகத் தேர்ந்து எடுக்கவில்லை. வரலாறு தான் அதை எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது. சுதந்திரம் வேண்டுவதைத் தவிர வேறு எதையும் வரலாறு எமக்கு விட்டு வைக்கவில்லை" என்ற தேசியத் தலைவரின் சிந்தனை வழியே எமது மண்ணினதும் மக்களினதும் விடிவிற்காக உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு சாத்வீகமான முறையில் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுப்போம் என இன்றைய நாளில் உறுதியேற்போம்.

- வட மாகாண மகளிர் விவகார
அமைச்சர் அனந்தி சசிதரன்


Sasika learners
சசிகா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை



எம்மிடம் உள்ள வசதிகள்

பல்லாகம் 021 224 3393
வேலணை 021 221 5472
சாவகச்சேரி 021 225 1664




For All Your Migration & Education Services

Namal Fernando

Registered Migration Agent 0214725,
Qualified Education Agent QEAC C188, MMIA 3972,
CPA (Aus), ACMA (UK), BCom (Aus), GCCM (Aus)

OZ VISAS EDUCATION SERVICES
Full range of educational services
- Career guidance
- Enrolments
- Change courses / providers
- Sponsoring your relatives for education
- Student visas (Onshore / Offshore)

MIGRATION SERVICES
For all types of visas to Australia
- Skilled Migration
- Business Visas
- Student Visas
- Family Visas (Parents / Spouse / Others)
- Visit Visas (Onshore / Offshore)
- MRT cases



MELBOURNE OFFICE:
Tel: 0421 453 364
ENES Associates / OZ Visas Pty Ltd
3/1, High View Rd, North Balwyn, Victoria 3104


SRI LANKA OFFICE:
Tel: 11 2715 755 / 5749 499
OZ Visas, 2/1, Huludagoda Road,
Off Templers Road, Mount Lavinia.

Quality, personalized service and value for money assured.
Week day & Weekend appointments available.

Contact: 011 5925 792
011 2715 755
email: nsaustralia@yahoo.com

# வட மாகாண சபையையும் உள்வாங்கி செயற்படுங்கள்

## இந்தியாவிடம் முதலமைச்சர் கோரிக்கை



கொழும்பு, ஜன. 13

வடக்கில் முன்னெடுக்கப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அதில் வட மாகாண சபையையும் உள்வாங்க வேண்டும் என இந்தியாவிடம் கோரியிருக்கிறார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

இலங்கைக்கான இந்திய தூதுவர் தரண்ஜித்த சிங் சந்துவிற்கும் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே முதலமைச்சர் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கம் 45.27 மில்லியன் டொலரை கடனாக வழங்குகிறது. இதற்கான உடன்படிக்கை கைச்சாத்தான போதே முதலமைச்சர் தனது வேண்டுகோளை முன்வைத்தார்.

கடந்த காலங்களில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும்போது அந்த திட்டத்தை அமுல்படுத்துபவர்களும் அதற்கான நிதி உதவியை வழங்குபவர்களும் மத்திய அரசும் மாத்திரமே சம்பந்தபட்டிருந்தனர். ஆனால் இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது வட மாகாண சபை உள்வாங்கப்படவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் திட்டங்களிலாவது வடக்கு மாகாண சபையை அப்பகுதியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் உள்வாங்கப்படவேண்டும் என இந்திய தூதுவரிடம் தெரிவித்தார்.

இதேவேளை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்காக புதிதாக 50, 000 வீட்டுத்திட்டங்களை வழங்குவதற்கு இந்தியா முன்வர வேண்டும்- என்றும் கூறினார். (ச)

## தேர்தல் விதி மீறல் முல்லைத்தீவில் 18


முல்லைத்தீவு, ஜன. 18

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் நேற்றுமுன்தினம் வரை 18 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு , கரைதுறைப்பற்று , துணுக்காய் மாந்தை கிழக்கு ஆகிய 4 பிரதேச சபைகளுக்கும் பல கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இதுவரை (நேற்றுமுன்தினம்) 18 தேர்தல் விதிமுறை மீறல்கள் பதிவாகியுள்ளன. விசுவமடுவில் வேட்புமனுவில் கையொப்பமிட விடாது பெண் வேட்பாளரை கடத்திய சம்பவம் தொடக்கம் பதினெட்டு தேர்தல் விதிமுறை சம்பவங்கள் பதிவாகியுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ச)

## மிஹின் லங்கா மோசடிகள் அடுத்த வாரம் ஆணைக்குழு




கொழும்பு, ஜன. 14

மிஹின் லங்கா மற்றும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனங்களில் இடம்பெற்றன எனக் கூறப்படும் மோசடிகளை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு அடுத்தவாரம் நியமிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

தம்புள்ளையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் விமான நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள மோசடிகள் சம்பந்தமாக விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதாக ஏற்கனவே ஜனாதிபதி அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## இன்றைய கேலிச்சித்திரம்




## தொடர்ச்சிகள்

**ஜனாதிபதி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களின் குடியிருப்புகள் மற்றும் விவசாய காணிகள் இன்னும் படையினர் வசமே உள்ளன என்பதை தாழ்மையுடன் தெரியப்படுத்துகிறேன்.

இந்த விவசாய நிலங்களுக்கு சொந்தமான பொதுமக்களில் பலர் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.' வட மாகாணத்தில் பொதுமக்களின் காணிகளில் படையினர் ஆடம்பர ஹோட்டல்களையும்கட்டியுள்ளனர்.

பொதுமக்களின் இந்த காணிகளை விடுவிக்க ஜனாதிபதி தேவையான நடவடிக்கைகளை எடுத்து அதற்கான முனைப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

அப்போது இந்த காணிகளுக்குரிய மக்கள் தமது காணிகளில் அமைதியாக வாழ்க்கையை கொண்டு நடத்த முடியும். இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக சார்ள்ஸ் நிர்மலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் படையினர் வசம் இருக்கும் பொதுமக்களின் காணிகள் பற்றியும் நிர்மலநாதன் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் பட்டியலிட்டுள்ளார்.

கிளிநொச்சி முழங்காவில் - 1,800 ஏக்கர் மர முந்திரிகை தோட்டம்,

மன்னார் வெள்ளாங்குளம் 500 ஏக்கர் விவசாய பண்ணை,

கிளிநொச்சி முக்கொம்பன் 100 ஏக்கர் தென்னந்தோட்டம்,

முல்லைத்தீவு தேராவில் 1,200 ஏக்கர் பொது விவசாய பண்ணை,

கிளிநொச்சி வட்டக்கச்சி 400 ஏக்கர் அரசாங்க விவசாய பண்ணை,

முல்லைத்தீவு கேப்பாபிலவு 3 ஆயிரம் ஏக்கர் விமானப்படை மக்கள் குடியிருப்பு,

கிளிநொச்சி முழங்காவில் 800 ஏக்கர் விமானப்படை தளம்,

மன்னார் முள்ளிக்குளம் 600 ஏக்கர் கடற்படை தளம்,

முல்லைத்தீவு வட்டுவாகல் 680 ஏக்கர் இராணுவ முகாம்,

மன்னார் சன்னார் ஆயிரத்து 500 ஏக்கர் இராணுவ முகாம்,

கிளிநொச்சி சாந்தபுரம் 680 ஏக்கர் விவசாய பண்ணை,

கிளிநொச்சி ஜெயபுரம் 120 ஏக்கர் பொதுப் பண்ணை,

கிளிநொச்சி மலையாளபுரம் 798 ஏக்கர் பொதுப் பண்ணை,

யாழ்ப்பாணம் வலிகாமம் 4,500 ஏக்கர் மக்களின் குடியிருப்பு என்பன அதில் அடங்குகின்றன. (ச)

**சுமந்திரன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

324 ஆவது நாளான நேற்று அவர்கள் ஒன்றுகூடி போராட்டத்தை நடத்தினர். இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்கள் அடங்கிய பதாதைக்கு மண்ணள்ளித் திட்டினர். பின்னர் ஒப்பாரி வைத்து அழுதனர். இவர்களாலேயே (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்) எனப் பதாதையை சுட்டிக் காட்டி ஒப்பாரி வைத்து அழுதனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது சுமந்திரன் எம்.பி. குழப்பத்தை ஏற்படுத்தினார் எனக் கூறியதுடன், சுமந்திரன் ஒரு துரோகி எனச் சாடினார். கதறி அழுது ஆர்ப்பாட்டம் செய்ததில் சில தாய்மார்கள் மயங்கி வீழ்த்தினார்.

நாளை (இன்று) தைப்பொங்கல் கொண்டாடப்படும் நிலையில் எங்கள் பிள்ளைகள் வருவார்களா என்ற ஏக்கத்துடனேயே காத்திருக்கிறோம் என ஏக்கத்துடன் தெரிவித்தனர். (ச)

**கல்வியில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய ரீதியாக முதலாம் இடம் மற்றும் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையிலான முன்னேற்றத்தை வட மாகாணம் கண்டுள்ளது.

வடக்கு மாகாணம் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருப்பதாக யாராலும் கூற முடியாத முன்னேற்றத்தைப் பெற வேண்டும். கடந்த வருடம் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த கல்வித் திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்" என்று மாகாண கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச)

**வீதியிலேயே...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் இம்முறை தைப் பொங்கலை வீதியில் கொண்டாட வைத்துள்ளது அரசு. எனவே நாம் வீதியில் பொங்கிப் போராடவுள்ளோம் எனக் கேப்பாபிலவில் 319 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவு மக்களுக்கு சொந்தமான காணிகளை விமானப் படையினர் அபகரித்துள்ளனர். தமது காணியை விடுவிக்குமாறு கோரி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மக்களின் தொடர் போராட்டத்தால் கடந்த 28 ஆம் திகதி 133.4 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது. எனினும் 104 குடும்பங்களுக்குச் சொந்தமான 181 ஏக்கர் காணிகளை விமானப்படை ஆக்கிரமித்து வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



# யாழ். குடாநாடு விரைவில் தீவாகும்

## ஐங்கரநேசன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜன.14

பூமி சூடாகி வருகிறது. இதனால் கடல் மட்டம் உயருகின்றது. விரைவிலேயே பல நாடுகளின் கரையோரப் பகுதிகளைக் கடல் மூழ்கடித்துவிடும் என்று எச்சரிக்கப்படுகிறது. இந்த நிலையில் யாழ். குடாநாடும் அதன் கழுத்துப் பகுதியான ஆனையிறவும் கூட கடல்நீர் புகுவதால் பெருநிலப்பரப்பில் இருந்து துண்டிக்கப்படும் அபாயத்தில் உள்ளன என முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை ஒன்றில் மாணவர் மத்தியில் உரையாற்றியிருந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, ஒரு மாடு தனக்குத் தேவையான புல்லை மாத்திரமே உண்கிறது. தன் வயிற்றுப்பசி அடங்கிய பின்னர் ஒருவாய் புல்லைத் தன்னும் அது மேலதிகமாக மேய்வது கிடையாது. ஆனால், ஒரு சிங்கம் தனக்கு வேண்டிய உணவின் அளவைவிட மிகப் பன்மடங்கு எடைகொண்ட விலங்கையே வேட்டையாடுகிறது. இந்த வேட்டைக் குணாம்சம்தான் மனிதர்களிடமும் உள்ளது.

மனிதர்கள் நுகர்வு வெறியைக் குறைத்தால் மாத்திரமே பூமியும் ஏனைய உயிர்களும் காப்பாற்றப்படும். இதற்கான முயற்சியில் முன்னுதாரணர்களாக மாணவர்கள் இருக்கவேண்டும். ஒரு பொருளை வாங்கும் போது அது கட்டாயம் தேவைதானா என்று பல முறை சிந்தியுங்கள். வாங்கிய பின்னர் அதன் ஆயுட்காலம் முடியும்வரை முழுமையாகப் பயன்படுத்துங்கள். எறிவதற்கு முன்னர் இன்னமும் கொஞ்ச நாட்கள் பயன்படுத்த முடியுமா என்று பாருங்கள் என்றும் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். (ச)

# பொலிஸிடமே கைவரிசை!

மன்னார், ஜன. 14

பொலிஸ் நிலையம் கட்டுவதற்காகக் குவித்து வைத்திருந்த மணலைக் களவாடிச் சென்றுள்ளது திருடர் குழு.

மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் துயிலும் இல்லம் முன்பாக பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படுகின்றது. இதற்காகப் பெருந்தொகையளவில் மணல் பறிக்கப்பட்டுக் குவிக்கப்பட்டிருந்தது.

இந்த மணலை இரவோடிரவாகத் திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர். இந்த மணல் திருட்டு நடந்தது உண்மையே என ஏற்றுள்ள பொலிஸார், மணல் திருடர்களை தேடி வருவதாகவும் விரைவில் பிடித்து விடுவோம் என்றும் தெரிவித்தனர். (ச)

# வவுனியாவும் பறிபோகும் தமிழ் மக்களிடம் இருந்து

## எச்சரிக்கிறார் சத்தியலிங்கம்



வவுனியா, ஜன. 14

வவுனியா மாவட்டம் தமிழ் மக்களின் கைகளிலிருந்து பறிபோகும் சூழல் காணப்படுவதாக வடமாகாண சபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களை போன்று எதிர்காலத்தில் வவுனியா மாவட்டமும் பறிபோகும் நிலையை கடந்த ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா நகரசபையில் ஆட்சி அமைத்த பின் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைப் பிரகடனம் நேற்றுமுன்தினம் வடமாகாண சபை உறுப்பினரும் வவுனியா மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவருமான ப.சத்தியலிங்கத்தினால் வவுனியா, குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சி சார்பாக உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் அபிவிருத்தி தொடர்பான விடயங்களை விடுத்து அரசியல் கட்சிகள் உள்ளூராட்சி மன்றத்தின் தேர்தலுக்கு சம்பந்தமில்லாத விடயங்களை பேசி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (ச)

# மைத்திரி மீது ஐ.தே.க. கடுப்பு

கொழும்பு,ஜன.14

தனது பதவிக்காலம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்திடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கம் கோரியமை, அவரை ஆட்சியில் அமர்த்திய ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிவில் சமூகத்துக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல,

"தனது பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது என்று உச்சநீதிமன்றத்திடம் ஜனாதிபதிவிளக்கம் கோருவதற்கு முன்னர், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தால் நல்லது.

இது அரசாங்கத்தின் பங்காளிகளிடையே அதிருப்திகளை ஏற்படுத்தியுள்ளது. உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஆறு ஆண்டுகள் என்று வந்தாலும் கூட, 5 ஆண்டுகளின் பின்னர், ஜனாதிபதி முன் கூட்டியே தேர்தலை அறிவிக்கும் வாய்ப்பும் உள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# அரசின் முயற்சிக்கு வலுச் சேர்க்கும் பொங்கல்



உலகவாழ் தமிழ் மக்கள் இயற்கைக்கு தமது நன்றியைப் பறைசாற்றும் வகையில் அனுஷ்டிக்கப்படும் தைத்திருநாளை முன்னிட்டு இந்த வாழ்த்துச்செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மானிட சமூகத்தினை நாகரிகத்தை நோக்கிப் பயணிக்க வைப்பதில் உழவுத் தொழிலே முக்கிய காரணியாக அமைந்தது. நவீன கைத்தொழில் மயமாக்கத்தினதும் தொழில்நுட்ப வளர்ச்சியினதும் ஈர்ப்பினால் கிராமவாசிகள் விவசாயத்தைக் கைவிட்டு, நகரங்களை நோக்கி படையெடுக்கும், நிலையிலும் பண்டைய பாரம்பரியங்களுடன் கொண்டாடப்படும் இத்தகைய பண்டிகைகள் மனிதனின் கலாசாரம், பண்பாடு, மனிதநேயம், ஒற்றுமை, பகிர்ந்துண்ணல் மற்றும் உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் போன்ற விழுமியப் பண்புகளை சமூகத்தில் பேண உதவுவதுடன் அவற்றை எதிர்கால தலைமுறையினரை நல்வழிப்படுத்தும் வகையில் பாதுகாப்பதற்கும் வாய்ப்பாக அமைகின்றன.

அத்தோடு உழவுக்குப் பெருமை சேர்க்கும் தைத்திருநாளானது, உணவு உற்பத்தியைப் பெருக்கி, அதில் தன்னிறைவைப் பெறவேண்டும் என்ற அரசாங்கத்தின் முயற்சிக்கும் வலுச்சேர்ப்பதாகவே அமைகிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் கொண்டாடப்படும் தைத்திருநாள் அனைவரது வாழ்க்கையிலும் வளம், நலம், செழிப்பு, மகிழ்ச்சி உள்ளிட்ட எல்லா நலன்களும் பொங்கச்செய்ய வேண்டும் என்ற பிரார்த்தனையுடன், தைத்திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது மணங்கனிந்த இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

# தென்னாபிரிக்கா நிதானம்



செஞ்சூரியன், ஜன.14

இந்திய- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில், செஞ்சூரியனில் நடைபெற்று வரும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தென்னாபிரிக்க அணியின் டீன் எல்கர், மார்கிராம் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் இந்திய அணியின் பந்து வீச்சை நேர்த்தியாக எதிர்கொண்டனர்.

தென்னாபிரிக்கா 85 ஓட்டங்கள் எடுத்த நிலையில் முதல் விக்கெட்டை இழந்தது. டீன் எல்கர் 31 ரன்கள் எடுத்த நிலையில் அஸ்வினின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து ஹசிம் அம்லா களம் இறங்கினார். மார்கிராம் உடன் இணைந்து அம்லா பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

சிறப்பாக விளையாடிய மார்கிராம் 94 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஸ்வினின் பந்தில் விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இதனால் சொந்த மைதானத்தில் சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

3 ஆவது விக்கெட்டுக்கு அம்லா உடன் டி வில்லியர்ஸ் ஜோடி சேர்ந்தார். ஆயினும் டிவில்லியர்ஸ் 20 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, இஷாந்த் ஷர்மாவின் பந்தில் ஸ்டெம்புகள் சிதற அவுட் ஆனார். அதன்பின் அணித்தலைவர் டு பிளிசிஸ், அம்லாவுடன் சேர்ந்து நிதானமாக விளையாடினார்.

அரைச்சதம் கடந்த அம்லா, 82 ஓட்டங்களில் எதிர்பாராத விதமாக 'ரன் -அவுட்' ஆனார். அவரைத்தொடர்ந்து களமிறங்கிய டீ கொக் முதல் பந்திலேயே விராட் கோலியிடம் பிடி கொடுத்து 'டக் '-அவுட்' ஆனார்..டீ கொக் ஆட்டமிழந்த சிறிது நேரத்தில் அடுத்ததாகக் களமிறங்கிய வேர்னான் பிலாண்டரும் ' ரன் - அவுட் 'ஆனார்.

அதைத்தொடர்ந்து டு பிளிசிஸ், கேஷவ் மகராஜ் இணைந்து விக்கெட் இழப்பை கட்டுப்படுத்தப் போராடினர். முதல்நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா 6 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டு பிளிசிஸ் 24 ஓட்டங்களுடனும், கேஷவ் மகராஜ் 10 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்திய அணி சார்பில் பந்துவீச்சில் அஷ்வின் 3 விக்கெட்டுகளும், இஷாந்த் ஷர்மா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (அ)



# சுபீட்சமான எதிர்காலத்துக்கே முன்னுரிமை கொடுங்கள்

2018ஆவது ஆண்டு பொங்கல் விழா தமிழ் கூறும் நல்லுலகு முழுவதும் கொண்டாடப்படும் வேளை இலங்கையிலும் புலம் பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் பொங்கல் விழாவை நன்றியோடு கொண்டாடும் தமிழ் மக்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

பொங்கல் விழா நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் விழா. நம்மைத் தாங்கும் நிலம் நமக்குத் தருகின்ற அனைத்து பயன்களுக்கும் நன்றி சொல்லும் விழா. முதல் விளைச்சலை இறைவனுக்கும் இயற்கைக்கும் காணிக்கையாக்கும் விழா.

நன்றி கூறும் பண்பு அனைத்து மனிதருக்கும் மிகவும் தேவையான ஒன்று. நம்மைப் படைத்த இறைவன் - நம்மோடு வாழும் அயலவர் - நம்மை காக்கும் இயற்கை ஆகிய மூவருக்கும் நாம் என்றுமே நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். இறைவன் நம்மைப் படைத்து பாதுகாத்து வருகிறார். அன்றாடம் வழிநடத்தி வருகிறார். அயலவர்கள் நம்மோடு அன்பையும் நட்பையும் பேணிவருகிறார்கள். இணைந்து வாழத் துணை புரிகிறார்கள். இயற்கை நமக்குத் தேவையானவற்றைத் தந்து உதவுகிறது. என்ன செய்தாலும் நம்மைத் தாங்கி வருகிறது. இந்த மூன்று நிலையினரை நோக்கியும் நம் உள்ளம் என்றுமே நன்றியால் பொங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

அனேகமான வேளைகளில் நாம் நன்றி கூறவும் நன்றியாக இருக்கவும் மறந்துவிடுகிறோம். இது அவர்கள் பணி - இது அவர்கள் கடமை - இதற்காக பணம் செலுத்தப்படுகின்றமையால் அவர்கள் இதைச் செய்யவேண்டுமென என்கின்ற மனப்பாங்கே நம்மில் மேலோங்கி இருக்கிறது. நன்றி என்ற வார்த்தையை இனிவருங்காலத்தில் அதிகம் பாவிக்கத் தொடங்குவோம். பொதுப்பணியை செய்வோருக்கும் என்றும் நன்றி சொல்வோம். இது அவர்கள் இன்னும் அதிக அர்ப்பணிப்புடன் செயலாற்ற உதவும். அனைவரும் இவர்களின் உதவியையும் மதிப்பையும் பெற இது வழிவகுக்கும்.

தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் பொதுநலனில் அக்கறை கொண்டோர் யார் - தமிழ் மக்களின் நீதியோடு கூடிய நிரந்தர தீர்விற்காக உழைக்கக் கூடியோர் யார் என்பதை இனங்காணவேண்டும். முகங்களுக்கல்ல கொள்கைகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஊரவர் உறவுகள் என்ற உணர்வு எல்லைகளைத் தாண்டி உண்மையாக திறமையுடையோரையும் இளையோர்களையும் தெரிவு செய்ய வேண்டும் என வேண்டுகிறோம். அரசியல்வாதிகளும் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் - கொள்கை சுயலாபங்கள் - கட்சி நலன்கள் - கருத்து வேறுபாடுகள் போன்ற அனைத்தையும் கடந்து தமிழ் மக்களின் ஒட்டுமொத்த சுபீட்சமான எதிர்காலத்திற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென தமிழ் மக்கள் அனைவர் பேராலும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள விடுக்கிறோம்.

இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

- கலாநிதி யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ் ஆயர்.

















வாசகர் குமுறல்

# இதற்கும் இப்போது சுற்றுநிரும்



**வே.தபேந்திரன்**

*பொய்யான சில பேர்க்கு புதுநாகரீகம்*
*புரியாத பல பேர்க்கு இது நாகரீகம்*
*முறையாக வாழ்வோருக்கு எது நாகரீகம்*
*முன்னோர்கள் சொன்னார்கள் அது நாகரீகம் "*

**கண்ணதாசன்**

கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்திய காலம் போய் மாணவர் ஒழுக்கத்தில் கவனம் செலுத்த வேண்டிய தேவை வந்து விட்டது.

பாடசாலைக்கு ஒரு மாணவர் எவ்வாறு போக வேண்டுமென சுற்றுநிருபம் விடுமளவுக்கு காலம் கெட்டு விட்டது.

நவநாகரீகம் எனும் பெயரில் மாணவர்கள் பாடசாலை செல்லும் கோலம் கெட்டுவிட்டது.

தலைமுடி எவ்வாறு இருக்க வேண்டும், சேர்ட் எவ்வாறு போட வேண்டும்,

ஜீன்ஸ் எனப்படும் நீளக் காற்சட்டை எவ்வாறு போட வேண்டும்,அதன் நீள அகலங்கள் எப்படி இருக்க வேண்டுமென வட மாகாண கல்வி அமைச்சு சுற்றுநிருபம் மூலமாக பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது.

பெற்றோரால் தமது பிள்ளைகளை வீட்டில் கட்டுப்; படுத்த முடியாத நிலை தான் பல இடங்களில் காணப் படுகிறது.


மாணவர்களது தான்தோன்றித்தனங்களால் அலங்கோலமாக அலங்காரம் இது என செல்லும் நிலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை வட மாகாணக் கல்வி அமைச்சு நிறைவேற்றி உள்ளது.

பலகோடி பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படியே பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தை காலை 8 மணிக்கு மாற்றுமாறும் பெற்றோர் சார்பில் கோரிக்கை விடுக்கிறேன்.

கொழும்பு போன்ற மாநகரங்களின் போக்குவரத்து நெருக்கடி போல எமது வட மாகாணத்தில் இல்லை தானே .ஆகவே காலை 7.30 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பிக்க வேண்டிய தேவை இல்லை.

## சபாநாயகர், பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை?



கொழும்பு, ஜன. 14

சபாநாயகர் கரு ஜயசூரிய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர மகிந்த ஆதரவு அணியான ஒன்றிணைந்த எதிர்க் கட்சி தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த 10ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஒன்றிணைந்த எதிரணி உறுப்பினர்களிடையே மோதல் ஏற்பட்டது.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்ற ஆரம்பித்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றது.

இந்த மோதல் நிலைக்கு சபாநாயகரே காரணம் என்று ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் குற்றம்சாட்டி வருகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவரும் முயற்சியில் ஒன்றிணைந்த எதிரணியினர் கலந்துரையாடி வருகின்றனர்.

எவ்வாறாயினும் ஆளுங் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக மகிந்த ராஜபக்ச அணியினர் இதுவரை கொண்டுவந்த அனைத்து தீர்மானங்களும் இறுதியில் தோல்வியிலேயே முடிவடைந்திருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. (ச)

# நாடு கடந்த தமிழீழரசின் உறுப்பினர் கட்டுநாயக்காவில் தடுத்து வைப்பு

கொழும்பு, ஜன. 14

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் ஒருவருக்கு அனுமதி மறுக்கப்பட்டு, நாடு கடத்தப்படுவதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என சுங்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்,

“சுரேஸ்நாத் இரத்தினபாலன் (வயது -48) தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் அபுதாபி வழியாக கடந்த வியாழக்கிழமை 3.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கினார். குடிவரவு அதிகாரிகளால் அவர்களின் கடவுச்சீட்டுக்கள் சோதனையிடப்பட்ட போது, சுரேஸ்நாத் இரத்தினபாலனின் பெயர் கறுப்புப்பட்டியலில் இருப்பது கண்டறியப் பட்டது.

அவரது குடும்பத்தினரை நாட்டுக்குள் செல்ல அனுமதி அளிக்கப்பட்ட போதும், அவர்கள், அவருடனேயே இருக்க முடிவு செய்துள்ளனர். திருப்பி அனுப்பப்படுவதற்காக அவர்கள் விமான நிலைய இடைத்தங்கல் அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இவர்களை நாடு கடத்தும் உத்தரவை ரத்துச் செய்து, நாட்டுக்குள் நுழைவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்க பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப் படுவதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஸ்நாத் இரத்தினபாலன், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் என்றும், முன்னைய அரசாங்கத்தினால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்ட புலம்பெயர் தமிழர்களில் ஒருவர் என்றும் கூறப்படுகிறது. இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக குடிவரவுக் கட்டுப்பாட்டாளரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், நாட கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரனுக்கு மின்னஞ்சல் அனுப்பி, அவரது பதிலுக்கு காத்திருப்பதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது. (ச)

## களைகட்டியது பொங்கல்



கிளிநொச்சி, ஜன.14

தைப்பொங்கலை முன்னிட்டு கிளிநொச்சியில் பொங்கல் வியாபாரம் நேற்று களைகட்டியது.பொது மக்கள் தைப்பொங்கல் நிகழ்வை சிறப்பாக கொண்டாடும் வகையில் பானை, கரும்பு, அரிசி போன்ற பொருட்களை , கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் பொதுமக்கள் முண்டியடித்து வாங்கினர். இதனால் வழக்கதை விடவும் சனக்கூட்டத்தால் கிளிநொச்சி சந்தை திணறியது. பொங்கலை முன்னிட்டு தனியார் பஸ்களும் விசேட சேவையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. (அ)

## மரண அறிவித்தல்

### சீனிவாசகம் செந்தூர்ராசா

(சித்தன்கேணி, கலைநகர் சிற்பசிகாமணி, கலாபூசணம்
கலைநகர் காங்கேயம்பதி முத்துமாரி அம்பாள் ஆலய அறங்காவலர்)

**மலர்வு**
**29 . 09 . 1940**



**உதிர்வு**
**12 . 01 . 2018**

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - தையல்முத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருகனும் காலஞ்சென்ற மங்களேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் குமுதவல்லி, வசந்தவல்லி, விஜியவல்லி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மசிவம், இன்பவதனன் (சிற்பச்சக்கரவர்த்தி), சதானந்தராஜா (அமெரிக்கா), ஆகியோரின் அன்பு மாமனாரும் நேசமலர், ஸ்ரீராஜமூர்த்தி (ஓய்வூதியர்), வதனராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருளானந்தசிவம் (சிற்பஞான பண்டிதர்), சிவஞானமணி, அமரர் பகரசிங்கம், அமரர் அருமைநாயகம், குகானந்தராஜா, பரமேஸ்வரி (பிரான்ஸ்) புனிதபுஸ்பம், முத்துசிவராஜா (பிரான்ஸ்), மகமாரியம்மா, பவளம்மா, அமரர் சச்சிதானந்தன், சிவஞானபோதலிங்கம், கலைச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேந்திநேசன் (ஆய்வுகூட உத்தியோகத்தர் - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), திலகநேசன் (பிரான்ஸ்), வினியா, பேரீசன், அமரர் சஞ்சீவன், சிலக்ஷனா (அமெரிக்கா), சயந்தா (அமெரிக்கா), கேசினி (அமெரிக்கா), லக்சியா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.01.2018) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொற்கைத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**கலைநகர்,**
**சித்தங்கேணி,**
**யாழ்ப்பாணம்.**

**077 979 0821,077 904 3660**
**021 225 0896**



# நியூட்டனின் உதைபந்தாட்டம்: அரையிறுதிக்குள் கலைமதி

கரணவாய், ஜன. 14

அண்ணாசிலையடி இளைஞரை வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கலைமதி ஏ அணி.

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் லீக் ஆட்டங்கள் அக்கழகத்தின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து அண்ணாசிலையடி இளைஞர் அணி மோதியது.

ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடிய கலைமதி ஏ அணி 2:0 என்ற கோல்க் கணக்கில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

மற்றொரு ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் கரணவாய் கொலின்ஸ் வி.கழகமும் மோதின. இதில் 3:0 என டயமன்ஸ் கழகம் வெற்றி பெற்றது. (ச - 66)



## புவனேஸ்வர் நீக்கம்

# குவியும் விமர்சனம்

புதுடில்லி, ஜன. 14

தென்னாபிரிக்காவுக்கு எதிரான நேற்றைய போட்டியில் இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார் நீக்கப்பட்டமை பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

நேற்றுப் போட்டி ஆரம்பிக்கப்பட முன்னர், வெளியில் உருவாக்கப்படும் கருத்துகளுக்கு இசையவில்லை எனக் கூறியிருந்தார். ரஹானே, விருத்திமன் சஹா ஆகியோர் அணிக்கு உள்ளவாங்கப் படவில்லை. அத்துடன் புவனேஸ்வர் குமார் நீக்கப்பட்டு பதிலாக இசாந்த் சர்மா சேர்க்கப்பட்டார்.

இதற்கான காரணம் வெளியாகவில்லை. இந்நிலையில் புவனேஸ்வர் குமாரின் நீக்கம் குறித்துப் பலரும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர்.



## ரஹானே நீக்கம்

# டொனல்ட் வரவேற்பு

கேப்படவுன், ஜன. 14

இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் ரஹானே, விளையாடும் பதினொருவுர் கொண்ட குழாமில் இருந்து வெளியே இருப்பதை தென்னாபிரிக்க அணி விரும்பும் என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் டொனால்ட்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் இந்திய அணியில் ரகானே இடம் பெறவில்லை. நேற்று ஆரம்பமான இரண்டாவது ஆட்டத்திலும் ரஹானே நீக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்தே டொனால்ட் இவ்வாறு தெரிவித்தார்.

'ரஹானே அணியில் இடம்பிடிக்காதது மிகவும் கடினமானது என நான் நினைக்கிறேன். கடந்த முறை இந்திய அணி தென்னாபிரிக்கா வந்தபோது ரஹானே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். கப்பலை நிலையாக வைத்திருக்க ரகானேயால் முடியும் என்பது எனது பார்வை. அவர் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தக் கூடியவர்' என்று டொனால்ட் மேலும் தெரிவித்தார்.

# பாகிஸ்தானை சுருட்டியது நியூசிலாந்து




டுனேடின், ஜன. 14

பாகிஸ்தான் அணியை 73 ஓட்டங்களுக்கு சுருட்டிய நியூசிலாந்து தொடரையும் கைப்பற்றியது.

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகள் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் தற்போது விளையாடி வருகின்றன. ஏற்கனவே இரு போட்டிகளில் வென்றுவிட்ட நியூசிலாந்து அணி மூன்றாவது போட்டியையும் கைப்பற்றும் நோக்குடன் நேற்றுக் களமிறங்கியது.

டுனேடின் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் அருமையாகப் பந்து வீசினர். ஆனாலும் வில்லியம்ஸன் (72 ஓட்டங்கள்) , ரெய்லர் (52 ஓட்டங்கள்) சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச் சதம் அடித்தனர். எனினும் பின்வரிசை வீரர்கள் தடுமாறினர். 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்த நியூசிலாந்து 257 ஓட்டங்களைக் குவித்தது.

பாகிஸ்தான் சார்பில் பந்து வீசிய ரயீஸ், ஹசன் அலி தலா 3 விக்கெட்களையும், சடாப் கான் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் வீரர்கள் நியூசிலாந்தின் பந்து வீச்சாளர்களை சமாளிக்க முடியாமல் திணறினர். 74 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் பாகிஸ்தான் இழந்தது. 11 ஆவது வீரர் முஹமட் அமீர், கப்டன் சர்பரஸ் அஹமட் அதிகபட்சமாக 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

போல்ட் 5 விக்கெட்களையும், முன்ரோ, பெர்குஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

ஆட்டத்தை 183 ஓட்டங்களால் வெற்றி கொண்ட நியூசிலாந்து, 3-0 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியது.

# லக்மாலுக்கு உயர்வு!



கொழும்பு, ஜன. 14

இலங்கை டெஸ்ட் அணியின் உப தலைவராக சுரங்க லக்மால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் போட்டி வரும் 31 ஆம் திகதி அந்நாட்டின் சிட்டாகொங் நகரில் இடம் பெறவுள்ளது.

இந்தத் தொடருக்கே சுரங்க லக்மால் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்துக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர அனுமதி வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# ஏலத்தில் 1,122 வீரர்கள்

ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்கும் ஒப்பந்தத்தில் ஆயிரத்து 122 வீரர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

ஐ.பி.எல். தொடரின் 11ஆவது சீசன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.


INDIAN PREMIER LEAGUE

தொடரில் பங்கெடுக்க விரும்பும் வீரர்கள் தம்மைப் பதிவுசெய்யும் கெடு நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்தது. இதன்படி ஆயிரத்து 122 வீரர்கள் இந்த ஏலத்தில் பங்கெடுக்கவுள்ளனர்.

பன்னாட்டு வீரர்களைப் பொறுத்தவரையில் கிறிஸ் கெய்ல், பென் ஸ்ரோக்ஸ் முன்னணியில் உள்ளனர். பெங்களூர் அணியில் விளையாடிய கெய்லின் ஒப்பந்தம் நீட்டிக்கப்படவில்லை. எனவே, அவர் மீண்டும் ஏலத்தில் பங்கேற்கிறார். இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் முதல் முறையாக ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்கிறார்.

வெளிநாடுகளில் இருந்து மொத்தம் 282 வீரர்கள் ஏலத்தில் பங்கேற்க பெயர்களை பதிவு செய்துள்ளனர். அதிகபட்சமாக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த 58 வீரர்கள் பதிவு செய்துள்ளனர். தென்னாபிரிக்காவில் இருந்து 57 பேரும், மேற்கிந்தியத் தீவுகள், இலங்கையில் இருந்து தலா 39 பேரும், நியூசிலாந்தில் இருந்து 30 பேரும், இங்கிலாந்தில் இருந்து 26 பேரும் ஏலத்தில் பங்கேற்கின்றனர்.

## அலங்கா நல்லூரில் வீரர்கள் மீது தடியடி



சென்னை,ஜன.14

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் பங்கேற்கப் பெயர்களைப் பதிவு செய்ய தமிழகம் முழுவதுமிருந்து 2 ஆயிரம் மாடுபிடி வீரர்கள் நேற்றுத் திரண்டனர்.

ஆயினும் உடல் தகுதி பரிசோதனையில் ஏராளமானோர் வேண்டுமென்றே நிராகரிக்கப்பட்டதாகப் புகார் கூறப்பட்டத்தையடுத்து சர்ச்சை எழுந்துள்ளது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்துவதற்கான ஏற்பாடுகள் தென்மாவட்டங்களில் களைகட்டியுள்ளன. மதுரையில் அவனியாபுரத்தில் வரும் 14 ஆம் திகதியும், பாலமேட்டில் 15 ஆம் திகதியும், அலங்காநல்லூரில் 16 ஆம் திகதியும் ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெறுகிறது.

இந்தப்போட்டியில் பங்கேற்கும் மாடுபிடி வீரர்கள், காளைகளைப் பதிவு செய்யும் பணியும், உடற் தகுதி பரிசோதனை மேற்கொள்ளும் பணியும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

தங்கள் பெயர்களைப் பதிவு செய்வதற்காக நேற்று 1,500 க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் பாலமேட்டில் திரண்டனர். கூட்ட நெரிசல் ஏற்பட்டதையடுத்து, பொலிஸார் தடியடி நடத்தினர். இதில், சிலர் காயமடைந் தனர். (இ)

## உறவுகள் தொடர்கதை

இஸ்லாமாபாத், ஜன.14

பயங்கரவாத ஒழிப்பில் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி, பாகிஸ்தானுக்கு அளித்து வந்த இராணுவ நிதி உதவி உள்ளிட்ட அனைத்து நிதி உதவிகளையும் அமெரிக்கா நிறுத்திய போதும், இரு நாடுகளுக்கும் இடையேயான தகவல் பரிமாற்றங்கள் தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவு செய்தி தொடர்பாளர் முகமது பைசல் கூறும்போது, “தகவல் தொடர்பு வழிகளை அமெரிக்காவும், பாகிஸ்தானும் மூடி விடவில்லை. தொடர்ந்து திறந்து வைத்தபடியே உள்ளன. ஆர்வம் உடைய பல்வேறு பிரச்சினைகளில், இரு தரப்பும் பரஸ்பரம் தகவல்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு தான் இருக்கிறோம்” என்று குறிப்பிட்டார். (இ)

## ஏவுகணைத் தாக்குதலில் அழிந்தது படைமுகாம்



ரியாட், ஜன.14

சவுதி அரேபியா மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக யேமன்ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

யேமனில் நடந்து வரும் உள்நாட்டுப் போரில் அரசுக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயற்படுவதாகக் கூறி ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் அவ்வப்போது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.சமீபத்தில் பாய்ந்து வந்த ஏவுகணையை சவுதி அரேபியா இடைமறித்து அழித்தது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை சவுதி அரேபியாவின் நஜ்ரான் என்ற பகுதியில் உள்ள ஹெலிகொப்டர் மையத்தில் அமைந்துள்ள சிறப்புப் படையினரின் முகாமை குறித்து தாக்குதல் நடத்தியதாக ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.இதன்போது அந்த முகாம் அழிக்கப்பட்டதாகக் கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தபோதும், சவுதி அரசு அதை மறுத்துள்ளது. (இ)

## தொண்டர்களைச் சந்திக்கும் கருணாநிதி



சென்னை, ஜன.14

திமுக தலைவர் கருணாநிதி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தொண்டர்களை இன்று சந்திக்கவுள்ளார்.

15 மாதங்களுக்குப் பிறகு அவர் தொண்டர்களை சந்திக்கவிருப்பதால் திமுகவினர் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

உடல்நலம் குன்றியபின் கருணாநிதி முழு ஓய்வில் இருந்து வருகிறார். அண்மையில் அவர் முரசொலி அலுவலகத்துக்கு வருகை தந்தார். அதன்பின்னர் அண்ணா அறிவாலயத்துக்கு ஒருமுறை வந்தார். சமீப காலமாக பிரதமர் மோடி தொடக்கம் அரசியல் தலைவர்கள் பலரும் கருணாநிதியை நேரில் சந்தித்து நலம் விசாரித்து வருகின்றனர்.


அரசியல் பிரவேசத்தை அறிவித்த ரஜினிகாந்த் கூட திமுக தலைவர் கருணாநிதியை நேரில் சென்று சந்தித்தார். கருணாநிதியின் உடல்நிலையில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டுவரும் நிலையில் கருணாநிதி , இன்று காலை 11 மணிக்கு தொண்டர்களை சந்திக்கவிருக்கிறார்.

தொண்டர்களை சந்திப்பதை முன்னிட்டு சென்னை கோபாலபுரம் இல்லம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கருணாநிதி பூரண நலத்துடன் இருந்த காலகட்டங்களில் பொங்கல் பண்டிகையன்று தன்னை சந்திக்க வருபவர்களுக்கு புதிய 10 ஷரூபாத் தாள் தருவது வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முறை தொண்டர்களுக்கு புதிய 50 ஷரூபாத் தாளை அவர் வழங்கவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

## சசிகலா குடும்பத்தின் 4500 கோடி சிக்கியது





சென்னை,ஜன.14

சசிகலாவின் உறவினர்கள், நண்பர்களின் வீடுகள், நிறுவனங்களில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் காட்டாத 4,500 கோடி ஷரூபா கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சசிகலாவின் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகள், அலுவலகங்கள் என மொத்தம் 187 இடங்களில் வருமானவரிப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் கடந்த நவம்பரில் திடீர் சோதனை நடத்தினர். இதேபோல, போயஸ் கார்டனில் உள்ள மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வேதா நிலையத்தில் சசிகலா மற்றும் பூங்குன்றன் தங்கிய அறைகளில் 2 முறை சோதனை நடத்தப்பட்டது. இந்தச் சோதனையில் 2 பென் டிரைவ்கள், மடிக்கணினி மற்றும் ஏராளமான ஆவணங்களை அதிகாரிகள் கைப்பற்றினர்.

இதுகுறித்து வருமானவரித் துறை அதிகாரிகள் கூறியபோது, “சசிகலாவின் உறவினர்கள், நண்பர்களின் வீடுகள், நிறுவனங்களில் நடத்தப்பட்ட சோதனையில் கோடி கணக்கில் காட்டாத 4,500 கோடி ரூபா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சசிகலா குடும்பத்தினர் நடத்திய 30 போலி நிறுவனங்கள் உட்பட, இந்தச் சோதனையில் 80 போலி நிறுவனங்கள் கண்டுபிடிப்பட்டுள்ளன. போயஸ் தோட்டத்தில் நடத்தப்பட்ட சோதனையில் கிடைத்த பென்டிரைவ், ஹார்ட் டிஸ்க்குகளில் கிடைத்த ஆவணங்கள்தான் இந்த வழக்கில் பல முக்கியத் தகவல்களைத் தந்துள்ளன” என்றனர் . (இ)

## அடுத்த சோதனைக்கு ஆயத்தம்?

வோஷிங்டன், ஜன.14

வடகொரியாவில் புதிதாக அணு ஆயுத சோதனை நடத்த மேண்டப் மலையின் புங்கி-ரி பகுதியில் புதிதாக சுரங்கம் தோண்டப்படுகிறது என்று அமெரிக்காவின் வாஷிங்டனைச் சேர்ந்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்கு ஆதாரமாக செயற்கைக்கோள் புகைப்படங்களையும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

இதனிடையே அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அளித்த பேட்டியில், “வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுடன் தற்போது நல்ல உறவு முறையில் இருக்கிறேன். நான் கிம்முடன் பேசினேனா, இல்லையா என்பது குறித்து எதுவும் கூற முடியாது” என்று தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக அதிபர் ட்ரம்பும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னும் கடும் சொற்களால் பரஸ்பரம் விமர்சித்து வந்தனர். இதில் திடீர் திருப்பமாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், வடகொரியாவுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்தது குறிப்பிடத்தக்கது. (இ)














இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 14.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.